இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 276 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – வைகாசி 03 – சனிக்கிழமை 17 மே 2025 – வெளியூர் 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 276 : Thiruvalluvar Year - 2056 - Vaikasi 03 - Saturday 17 May 2025 - Dak 16 Pages ₹ 5.00



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (16.5.2025) நீலகிரி மாவட்டம் உதகமண்டலத்தில், நீலகிரி ஆதிவாசிகள் சக்தி சங்கத்தின் செயலாளர் சந்திரன் மற்றும் நிர்வாகிகள் சந்தித்துப் பேசினார்கள். இச்சந்திப்பின்போது, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா, அரசு தலைமைக் கொறடா கா.ராமச்சந்திரன், மாவட்டப் பொறுப்பாளர் கே.எம்.ராஜு, கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் பா.மு.முபாரக் ஆகியோர் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (16.5.2025) நீலகிரி மாவட்டம் உதகமண்டலத்தில், படுகர் நலச் சங்கத்தின் தலைவர் தியாகராஜன் மற்றும் நிர்வாகிகள் சந்தித்துப் பேசினார்கள். இச்சந்திப்பின்போது, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா, அரசு தலைமைக் கொறடா கா.ராமச்சந்திரன், மாவட்டப் பொறுப்பாளர் கே.எம்.ராஜு, கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் பா.மு.முபாரக் ஆகியோர் உடனிருந்தனர்.

### 12ஆம் வகுப்புத் தேர்வில் ஆதிதிராவிடர் – பழங்குடியின மாணவர்கள் 96 சதவிகிதம் தேர்ச்சி பெற்று சாதனை !

# கல்வியில் சமூக நீதிக்கான வெற்றி இது!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம் !

**சென்னை, மே 17-**

**தமிழ்நாட்டில் மே 8ஆம் தேதி பிளஸ் 2 தேர்வு முடிவுகள் வெளிவந்து 95.03 சதவிகித மாணவ - மாணவியர் தேர்ச்சி பெற்றனர். குறிப்பாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ - மாணவியர் 96 சதவிகிதம் தேர்ச்சி பெற்று புதிய சாதனை படைத்துள்ளனர்.**

இந்தச் சாதனையானது, கல்வியில் சமூக நீதிக்கான வெற்றி என்று குறிப்பிட்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

அதுமட்டுமின்றி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 10 மற்றும் 11 ஆம் வகுப்புகளில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.



தமிழ்நாட்டில் பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத்தேர்வில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களின் தேர்ச்சி சதவிகிதம் கடந்த 60 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு 96 சதவிகிதத்தை அடைந்து புதிய சாதனை படைத்துள்ளது குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**கல்வியில் சமூகநீதிக்கான வெற்றி இது! ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களின் தேர்ச்சி இதுவரை இல்லாத உச்சத்தை அடைந்துள்ளது. உயர்கல்வியிலும் இந்த உயரத்தை உறுதிசெய்து வருகிறோம்!**

**தமிழ்நாட்டின் கல்வி வளர்ச்சிக்காக நமது திராவிட மாடல் அரசு தீட்டும் திட்டங்களால் வரலாற்றில் இடம்பெறும்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

**10 மற்றும் 11ஆம் வகுப்புகளில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு வாழ்த்து!**

தொடர்ந்து 10 மற்றும் 11ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் தேர்ச்சி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு வாழ்த்து தெரிவித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**10 மற்றும் 11ஆம் வகுப்புகளில் தேர்ச்சி பெற்றுள்ள மாணவர்கள் அனைவருக்கும் வாழ்த்துகள்!**

**பத்தாம் வகுப்பில் தேர்ச்சி பெற்றவர்கள், உங்கள் கல்லூரி இலக்குக்குத் தேவையான பாடப்பிரிவுகளைத் தேர்ந்தெடுத்துப் படியுங்கள்!**

**பதினோராம் வகுப்பில் தேர்ச்சி பெற்றவர்கள், இன்னும் அதிக மதிப்பெண்களைப் பெற்று பன்னிரண்டாம் வகுப்பில் தேர்ச்சி பெற வாழ்த்துகள்!**

**இந்தத் தேர்வுகளில் தேர்ச்சி பெற முடியாதவர்கள் மனம் தளர வேண்டாம். அடுத்தடுத்த தேர்வுகள் உள்ளன; அவற்றைப் பயன்படுத்திக் கொண்டு தேர்ச்சி பெறுங்கள்; கல்வியை இறுகப் பற்றிக்கொண்டு முன்னேறுங்கள்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

## பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வில் 93.80% பேர் தேர்ச்சி !

### அரசுப் பள்ளிகளில் 91.26% மாணவ - மாணவிகள் தேர்ச்சி!

*சென்னை, மே 17-*

*தமிழ்நாட்டில் பத்தாம் வகுப்பு தேர்வுகளில் 93 புள்ளி 80 சதவீத மாணவ, மாணவிகள் தேர்ச்சி பெற்றுள்ளனர். மாணவர்களை விட, 4 புள்ளி 14 சதவீத மாணவியர் அதிகம் தேர்ச்சி அடைந்துள்ளனர். அரசுப் பள்ளிகளில் படித்த மாணவ, மாணவிகளில் 91 புள்ளி 26 சதவீதத்தினர் தேர்ச்சி பெற்று சாதனை படைத்துள்ளனர்.*

*தமிழ்நாட்டில் கடந்த மார்ச் 28 ஆம் தேதியிலிருந்து ஏப்ரல் 15 ஆம் தேதி வரை நடைபெற்ற 10 ஆம் வகுப்பு தேர்வு முடிவுகளை, பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகத்தில் நேற்று வெளியிட்டார்.*

*அதில், தமிழ்நாட்டில் பத்தாம் வகுப்பு தேர்வுகளில் 93 புள்ளி 80 சதவீத மாணவ, மாணவிகள் தேர்ச்சி பெற்றுள்ளதாக கூறினார்.*

*தேர்வு எழுதிய மாணவ, மாணவியர்களில் 8 லட்சத்து 17 ஆயிரத்து 261 பேர், தேர்ச்சியடைந்துள்ளதாகவும் குறிப்பிட்டார். 4 லட்சத்து 17 ஆயிரத்து 183 மாணவியர்களும், 4 லட்சத்து 78 மாணவர்களும் தேர்ச்சியடைந்துள்ளனர். மாணவர்களை விட, 4 புள்ளி 14 சதவீத மாணவியர் அதிகம் தேர்ச்சி அடைந்துள்ளனர். அரசுப் பள்ளிகளில் 91 புள்ளி 26 சதவீதத்தினரும், அரசு உதவி பெறும் பள்ளிகளில் 93 புள்ளி 63 சதவீதமும், தனியார் சுயநிதிப் பள்ளிகளில் 97 புள்ளி 99 சதவீதமும் தேர்ச்சி பெற்றுள்ளனர்.*

*தமிழில் 98 புள்ளி 09 சதவீதமும், ஆங்கிலத்தில் 99 புள்ளி 46 சதவீதமும், கணிதத்தில் 96 புள்ளி 57 சதவீதமும், அறிவியலில் 97 புள்ளி 90 சதவீதமும், சமூக அறிவியலில் 98 புள்ளி 49 சதவீத மாணவ, மாணவிகள் 100 சதவீதம் தேர்ச்சி அடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*10ம் வகுப்பு பொதுத் தேர்வில் ஆங்கில பாடத்தில் 346 பேர் 100க்கு 100 மதிப்பெண் பெற்றுள்ளனர். இதேபோன்று, கணித பாடத்தில் 1996 பேரும், அறிவியல் பாடத்தில் 10,838 பேரும், தமிழ் மொழிப் பாடத்தில் 8 பேரும், சமூக அறிவியல் பாடத்தில் 10,256 பேரும் 100க்கு 100 மதிப்பெண் பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.*

### தமிழ்நாட்டில்

## தி.மு.க. தொடர்ந்து வெற்றி பெறும்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் நேர்காணலில் உறுதி!

உதகை, மே 17-

“2026 மட்டுமல்ல 2031, 36 என எல்லாமே தமிழ்நாட்டில் திராவிட மாடல் ஆட்சிதான்”என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

உதகையில் பயணம் மேற்கொண்டுள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பல்வேறு அரசியல் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கி வருகிறார். இந்த நிலையில், உடல் ஆரோக்கியத்திற்கு உடற்பயிற்சி மிக முக்கியம் என்பதை தொடர்ந்து வலியுறுத்தும் விதமாக உதகை மலைப்பகுதி மேம்பாட்டு மைதானத்தில் விளையாட்டு வீரர்களுடன் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று நடைப்பயிற்சி மேற்கொண்டார்.

பின்னர் அங்கிருந்த செய்தியாளர்களிடம் பேசிய அவர், “**உதகையில் 5 நாள் பயணம் மிக எழுச்சியாக இருந்தது. திராவிட மாடல் அரசு மீது மக்கள் காட்டும் ஆதரவைப் பார்க்கும்போது மிக மகிழ்ச்சியாக உள்ளது.**

**ஆளுநர் விவகாரத்தில் ஒன்றிய அரசு சர்வாதிகாரமாகச் செயல்படுகிறது. ஆளுநர் வழக்கு விவகாரத்தில் குடியரசுத் தலைவர் உச்சநீதிமன்றத்திடம் விளக்கம் கேட்டது தொடர்பாக நேற்றே அறிக்கை வெளியிட்டேன், மற்ற மாநில முதல்வர்களுடன் ஆலோசித்து, கருத்துகள் கேட்டு உரிய நடவடிக்கை எடுப்போம்.**

**திராவிட மாடல் ஆட்சிதான் தமிழ்நாட்டில் நிலைத்து நிற்கும். 2026 மட்டுமல்ல 2031, 36 என எல்லாமே தமிழ்நாட்டில் திராவிட மாடல் ஆட்சிதான்**” இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்தார்.